(திரு. க. உெ. ாளட்மண்ட்) [1979 நவம்பர் 10

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(3) கவன ஈர்ப்புகள் (தொடர்ச்சி).

(17) கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட் மூடப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ.இராமலிங்கம், சி. கோவிந்தராசன், வி. கே. கோதண்டராமன், ஏ. ஆர். மாரிமுத்து, ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், மா. மணிமாறன், ரெ. வீ. சவுந்திரராஜன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. ர. உமாநாத் அவர்கள்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி 41-ன் கீழ், கும்பகோணத்தில் தொழு நோய் கண்ட்ரோல் யூனிட் மூடப்பட்டதையொட்டி இருபதாயிரத்திற்கு மேற்பட்ட தொழு நோயாளிகளும், 50 தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய பதட்ட நிலை குறித்து மாண்புமிகு ஹெல்த் மினிஸ்ட்டர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, கும்பகோணம் தாலுகா சாக்கோட்டையில் இருக்கும் தூய இருதய ஆண்டவர் தொழுநோய் நிலையத்தில் மொத்தம் 141 பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களில் மருத்துவமனை பகுதியைச் சார்ந்தவர்கள் என்றும் களப் பணியாளர்கள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். இவர்களில் சிலர் முன்னாள் நோயாளிகள் ஆவார்கள். களப்பணி புரியும் 48 பணியாளர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து சங்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்தக் களப் பணியாளர்களில் 6 பேர்கள் முன்னால் நோயாளிகள் ஆவார்கள். இந்த நிலையம் தமிழக அரசிடமிருந்து எந்த உதவியும் பெறவில்லை. மத்திய அரசிடமிருந்து, ஆய்வு, கல்வி, சிகிச்சைக்கான மானிய உதவியை, இந்நிலையம் பெற்று வருகிறது. இந்த நிலையம், நன்னிலம், பாபநாசம் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் தொழு நோய் நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், இந்நிலையத்தின் ஆலோசனை கமிட்டியின் தலைவர் ஆவார்.

இந்த நிலையத்தின் நிர்வாகம்,பணியாளர்கள் புரிந்த வேலையினை ஆய்வு செய்தபொழுது சில களப் பணியாளர்களிடம் தரம் குறைந்த பணியைக் கண்டனர். இதற்காக, இவர்களின் மீது நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. ஆனால், களப் பணியாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மேற்படி

களப் பணியாளர்கள் கும்பகோணம் மாவட்ட முன்சீப் நீதி மன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ளார்கள். இச்சங்கத்தில் சில பணியாளர்களை பாபநாசம் மற்றும் கும்பகோணத்தில் கலந்து அவர்களுடைய குறைகளைப் போக்க ஒரு கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மாவட்ட தொழு நோய் மருத்துவ அதிகாரியால் அழைக்கப்பட்டார்கள். இச்சங்கத்தைச் சார்ந்த சுமார் 20 உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அதன் தலைவர் கலந்துகொள்ளவில்லை. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் இரு தரப்பார்களிடையே ஒரு சுமுகமான உடன்பாட்டிற்கு ஏற்பாடு செய்தார். சங்கத்தைக் கலைக்குமாறு நிர்வாகம் பணியாளர்களைக் கேட்டுக்கொண்டது. ஆனால் பணியாளர்கள் சங்கத்தைக் கலைக்க மறுத்துவிட்டார்கள். எனவே நிர்வாகம் தொழுநோய் நிலையத்தை மூடிவிட முடிவு செய்தது. அப்படி மூடுவதனால் அதிலே பணிபுரிகின்ற 48 பணியாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் பாதிக்கப்படும் என்று அரசு கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு சுமுகமான ஏற்பாட்டை மீண்டும் செயலாற்றும்படி கூறியது. ஆனால் அதே நேரத்தில் அரசாங்கமே எடுத்து நடத்த முடியுமா என்ற கருத்து ஆய்விலே இருக்கிறது.

இந்த தொழு நோய் நிலையத்திற்கு வரும் தொழு நோயாளிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. சிகிச்சை தொடர்ந்து இருக்கவேண்டுமெனக் கருதி தொழு நோயாளிகளுக்கு இரண்டு, மூன்று மாதங்களுக்கு பயன்படக்கூடிய மருந்தை மொத்தமாகச் சேர்த்து ஒரே தடவையில் அளிக்கப்படுகின்றது. தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் எல்லா தொழு நோயாளிகளும் இந்த சலுகையைப் பெறுகின்றார்கள். மேலும் அருகிலுள்ள மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் தொழு நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்குமாறு தஞ்சாவூர் மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி அவர்களுக்கு மருத்துவப் பணிகள் மற்றும் குடும்ப நல இயக்குநர் அவர்கள் அறிவுரை செய்துள்ளார்கள். இதனால் அப்பகுதிகளில் நோய் பரவுவதற்கு வாய்ப்புகள் ஏதும் கிடையாது.

* * * * * * * *

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இன்றைக்கு எடுத்துக்கொள்வதே கேள்விகள் கேட்டு அமைச்சர் பதில் சொல்கிற நிகழ்ச்சிகளாக இது அமையவில்லை. அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதால் அமைச்சர் பதில் சொல்லவில்லையென்றாலும் அது பத்திரிகைகளிலே வந்தோ, அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தோ நடவடிக்கை எடுப்பார்கள் என்ப

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

தால் ஏற்படுத்தப்பட்டதே தவிர இது முறைப்படுத்தப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு ஏற்படுத்தப்பட்ட நாம் வைத்துக்கொண்ட ஒன்று அல்ல. உறுப்பினர் சொன்னதையும், அமைச்சர் பதில் சொன்னதையும் வைத்துக் கொள்ளவேண்டுமேதவிர கேள்விகள் எழுப்ப ஆரம்பித்தால் இன்றைக்கு எல்லாம் அமர்ந்து இருக்க வேண்டும், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை, அப்படி முறைப்படுத்துவது சரியில்ல.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிக்கையில் கடைசியிலே உள்ள சில வரிகளைத் திருத்துவது நல்ல முன் மாதிரியாக இருக்கும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் சட்டமன்றக் கூட்டம் முடிகிற வேளையிலே கூட ஒரு * * கொண்டுவரப்பட்டதற்கு முன்மாதிரி இருக்கிறது என்று எதிர்காலத்திலே யாராவது வாதிடக் கூடும். எனவே அவர்கள் அந்தக் கடைசி வார்த்தைகளை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் எழுப்பியதை வைத்து இங்கே கொண்டுவந்து விட்டார், அவர் மீது குற்றம் இல்லை. அவர்கள், * * என்று சொன்னதை நீக்கிவிடவேண்டும். எழுப்பிய பிரச்சினையும் அவர் பதில் சொன்னவரையிலும் இருக்கும். பத்திரிகையிலேயும் நடவடிக்கைக் குறிப்பிலேயும் இருக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) கொடுக்கப்பெற்றுள்ள அறிவிப்புகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41-வது விதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், ஏற்றுக் கொள்ளப்பட்டதிலே அவையில் அறிக்கை வைக்கப்படாதது மான பட்டியல் என்னிடம் இருக்கிறது. அவைகளைப் படிக்க அனுமதிக்கப் போகிறேன். டிஸ்அலோ செய்திருப்பவைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றால் முடியாது. அலோ பண்ணியவைகளில் இங்கே அவைக்கு வராததைத் தான் எடுத்துக்கொள்கிறோம் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.